DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF SPECIAL COURT FOR EXCLUSIVE TRIAL OF NEGOTIABLE INSTRUMENTS ACT, TIRUNELVELI.**

**STC No. 213 /2021**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of Witness for | : | PW-1 | Caste | : | |
| Name | : | மெசர்ஸ் முத்தூட் பைனாஸ் லிமிடெட், பவர் ஆப் அட்டார்ணி கோல்டர் - டி.ஜீ. ராஜீவ் | Calling | : | |
| Father's Name | : | கோபாலகிருஷ்ணன் | Religion | : | இந்து |
| Village | : | திருநெல்வேலி | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of August 2021.

முதல் விசாரணை-

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். வழக்கினை கோப்பிற்கு எடுக்கவேண்டி, எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் எனது தரப்பு அசல் ஆவணங்கள் அனைத்தையும் தாக்கல் செய்துள்ளேன். எனது வழக்கினை கோப்பிற்கு எடுத்து எதிரிக்கு அழைப்பானை அனுப்பி, வழக்கினை விசாரிக்க கேட்டுக்கொள்கிறேன். எனது சத்திய பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தின் இறுதியில் தெளிவாக விவரித்துள்ள 21.12.2020 தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி வழங்கிய ரூ.37,75,578/- த்திற்கான ஐசிஐசிஐ வங்கி , தென்காசி கிளையின் காசோலை எண். 159571 வ.சா.ஆ-1 ஆகவும், 22.01.2021 தேதியில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, பெருமாள்புரம் கிளையின் பணம் இல்லை என்று காசோலை திருப்பபட்டதற்கான ரிட்டன் மெமோ வ.சா.ஆ-2 ஆகவும், 15.02.2021 தேதியில் புகார்தாரர், எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு அசல் வ.சா.ஆ-3 ஆகவும், 16.02.2021 தேதியில் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வ.சா.ஆ- 4 ஆகவும், 03.03.2021 தேதியில் எதிரி வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு வ.சா.ஆ -5 ஆகவும், 20.11.2020 தேதிய பவர் ஆப் அட்டார்ணி ஜெராக்ஸ் வ.சா.ஆ- 6 ஆகவும், 15.02.2021 தேதியில் வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு அனுப்பிய அஞ்சலக ரசீது வ.சா.ஆ-7 வரையிலான சாண்றாவனங்களை குறியீடு செய்கிறேன்.

குறுக்கு விசாரணை:- (எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குறுக்கு விசாரனை செய்ய வாய்ப்பு வழங்கப்படும்).

(S/dxxxxxxxx)
Judicial Magistrate
Special Court for NI Act cases
Tirunelveli